Narikoravas

* 95. Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the details of the steps taken by the Government to improve the living conditions of the Narikoravas in this State?

நரிக் குறவர்கள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள நரிக் குறவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மலைவாழ் மக்கள் நலனுக்காக செயல்பட்டு வருகின்ற திட்டங்கள் யாவையும் நரிக் குறவர்களுக்குப் பயன்படும்படியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் அண்ணா நகரில் திருவள்ளுவர் குருகுல பாடசாலையில் படிக்கின்ற நரிக்குறவ மாணவர்களிடமிருந்து அதற்காக அரசாங்கத்திடம் மானியம் கோரி ஏதாவது விண்ணப்பம் வந்தது உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே. அது குறித்து தகவல் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், கொடுக்கப்படும்.

Kundrakkudi Temple

* 96. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any representation has been made to the Government to bring the Kundrakkudi Temple within the scope of the Prevention of Begging Act; and

(b) if so, the action taken thereon by the Government?

குன்றக்குடித் திருக்கோயில்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குன்றக்குடித் திருக்கோயிலை, பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் கொண்டுவர அரசுக்குக் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

Kerala University Degree on Agriculture

*107. *Q.*—Thiru K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the State Government have de-recognised the Kerala University Degree on Agriculture; and

(*b*) if so, the reasons therefor?

கேரளப் பல்கலைக் கழக வேளாண்மைப் பட்டம்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கேரளப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மைப் பட்டப் படிப்பை இம்மாநில அரசு ஏற்றுக்கொள்ளவில்லையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.